சுற்றாடல் அமைச்சு,
"சம்பத்பாய" இல.82,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
17.05.2006

அமைச்சு சுற்றறிக்கை இல.02/2006.

வன பாதுகாவலர்,
எல்லா மாவட்ட செயலாளர்கள்,
எல்லா பிரதேச செயலாளர்கள்,

ஏனையகாடுகளாக வன பாதுகாவலருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளில் காடுகள் இல்லாத காணிகளை பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைத்தல்.

---

அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லா ஏனைய காடுகளை முகாமைத்துவம் மற்றும் நிர்வகித்தல் பொருட்டு வன பாதுகாவலருக்கு ஒப்படைத்தல் என்ற தலைப்பில் வன மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வெளியிட்ட 10.08.2001 ம் திகதிய இல 5/2001 சுற்றறிக்கை கீழ் உள்ள படி திருத்தியமைக்கப்படுகிறது.

மேலே 5/2001 சுற்றறிக்கையினால் காடுகள் எதுவும் இல்லாத காடுகளும் வன பாதுகாவலருக்கு ஒப்படைத்தல் காரணமாக அரசாங்கத்தில் அவசர அபிவிருத்தி தேவைகளுக்கு அவசியமான காணிகளைக் கூட இந்த விடயத்திற்காக விடுவிக்க ஏற்படும் தாமதங்களை தடுப்பதற்காக இந்த திருத்தத்தை அறிமுகப்படுத்தப்படுகிறது.

திருத்தங்கள்:

5/2001 சுற்றறிக்கையின் 03 ம் பந்திக்கு அதன் பின் கீழே குறிப்பிடப்படும் பந்தி சேர்ப்பதனால்

"அவ்வாறு இருந்த போதிலும் காடுகளாக இல்லாத காணிகளை மீள பிரதேச செயலாளர்களுக்கு விடுவிப்பதற்காக கீழே உள்ள படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.1. மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரால் வன பாதுகாப்பு திணைக்களத்தின் வட்ட வன உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர் மற்றும் காணி உபயோக திட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட மாவட்ட மட்ட குழு ஒன்று இந்த காடு இல்லாத காணிகளை அடையாளம் காண்பதற்காக நியமிக்க வேண்டும். தேவையான சந்தர்பங்களில் தொல் பொருள் திணைக்களம் வனஜீவி பாதுகாப்பு திணைக்களம் போன்ற தாபனங்களின் உத்தியோகத்தர்களையும் குழுவிற்கு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3.2. இந்த காணிகளை அடையாளம் காண்பது பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் செய்ய வேண்டிய படியால் பிரதேச செயலக மட்டத்திலான காணி உத்தியோகத்தர்கள் மற்றும் மற்றைய உத்தியோகத்தர்களின் உதவியை இதன் பொருட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

04) அரசாங்கத்தின் ஏனைய காட்டுப் படம் ஏதாவது வேறு உபயோக நடவடிக்கைக்காக உபயோகிக்க தேவைப்படுமானால் அது தொடர்பான கருத்திட்டத்தின் திட்டத்தை வன வள மற்றும் சுற்றுடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் உள்ள அமைச்சுக்களுக்கு கிடையிலான குழுவிற்கு சமர்பித்து அங்கிகாரத்தைப் பெற வேண்டும். அந்த அமைச்சுக்களுக் கிடையிலான குழு வன வளங்கள், காணி மற்றும் வன ஜீவி போன்ற விடயங்களைச் சேர்ந்த அமைச்சுக்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும். காணி பெற்றுக் கொள்வது தொடர்பாக உள்ள கருத்திட்ட திட்டத்தை முதலில் மாவட்ட காணி உபயோக குழுவிற்கு சமர்பித்து அதன் பின் அந்த சிபாரிசினை வன பாதுகாவலர் ஊடாக அவரின் சிபாரிசுடன் அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவிற்கு சமர்பிக்க வேண்டும். இந்த குழுவினால் பரிசீலிக்கப் படும் அந்த பிரேரணையை மீள, பிரேரித்தவருக்கு அனுப்பப்படும். சுற்றுடல் மதிப்பீடு தேவைப்படும் சந்தர்பங்களில் அந்த சுற்றுடல் மதிப்பு அத்தாட்சிப்பத்திரத்தை பிரேரிப்பவ-ரால் பெற்றுக் கொண்டு எனக்கு சமர்பிக்க வேண்டும். உரிய சிபாரிசுகளின் பிரகாரம் காணி பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அங்கிகாரத்தை என்னால் வழங்கப்படும் அதே வேளையில் அதன் பி சந்தர்பத்திற்கு ஏற்றபடி உரி கட்சிக்காரருக்கு ஏற்ற நிபந்தனை-களின் கீழ் காணி பெற்றுக் கொடுப்பது தொடர்பாக உத்தேசித்த காணியை காணி ஆணையாள ருக்கு விடுவிக்கப்படும்.

05. இப்பொழுது பிரகடனப்படுத்தி உள்ள தேசிய வன கொள்கைக்கு ஏற்ற படி புதிய சட்ட நகல் தயாரிக்கும் வரை மேலே குறிப்பிட்ட செயல் முறைகளை உபயோகித்துக் கொண்டு அரசாங்கத்தின் ஏனைய காடுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

06. இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவது பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மற்றும் நிர்வாக மறுசீலமைப்பு அமைச்சின் சம்மதத்துடனே ஆகும்.

07. தயவு செய்து இந்த சுற்றறிக்க கிடைத்ததை அறிவிக்கவும்.

ஒப்பம் என், பத்மநாதன்
செயலாளர்,
வன வள சுற்றுடல அமைச்சு,

பிரதிகள்:

1. ஜனாதிபதி செயலாளர் தகவலுக்கு
2. பிரதமரின் செயலாளர் ,,
3. அமைச்சரவை செயலாளர் ,,
4. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெரும் தோட்ட அமைச்சு. ,,